(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 19 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, செத்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0053/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கம் (PSMPA) என்பது 1891 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க PSMPA கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நூற்றாண்டு பழமைவாய்ந்த நியதிச்சட்ட நிதி நிறுவனமாகும் என்பதையும்,

(ii) அது, குழுவின் தலைவர், திறைசேரிச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் மற்றும் வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என்பதையும்,

(iii) அதன் அலுவலகத்துக்கான ஒரு கட்டிடம் 48 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொள்வனவாளருக்கும் (PSMPA) விற்பனையாளருக்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கை இல. 2921 இன் பிரகாரம் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்து ஒரு மாதத்தினுள் PSMPA இற்கான "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" பெறப்படும் வரை ரூபா 7 மில்லியன் தடுத்து வைத்தல் பணமாக வைக்கப்பட்டதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) 2006 ஆம் ஆண்டுக்கான PSMPA கணக்குகள் பற்றிய தனது அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்டவாறு, மூன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இற்றைவரை "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" கிடைக்கப்பெறவில்லை என்பதையும்,

(ii) அறியப்படாத ஏதோ காரணங்களுக்காக தடுத்து வைத்தல் பணத்தில் ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இவ்விடயம் தொடர்பாக பகிரங்க விசாரணை ஒன்றை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0078/ ’08

2\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) கணினிகளை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 05 வருடங்களில் வழங்குனர்களுக்கும் கணினி மென்பொருள் வழங்குனர் களுக்கும் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் கூறுவாரா?

(இ) இவர்களுக்கான நிலுவைகளை அரசாங்கம் செலுத்தாததன் காரணமாக பல வழங்குநர்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளனர் அல்லது நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவர்களுக்கு பணம் செலுத்தப்படவுள்ள திகதியை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0079/ ’08

3\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று நடைமுறையில் உள்ள சகல நேரடி மற்றும் மறைமுக வரிகளையும்,

(ii) இன்றைய விகிதங்களைப் பயன்படுத்தி, வரியின் தாக்கத்தை ரூபாவின் பெறுமதியிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரிசி, சீனி, பருப்பு, பால்மா, கோதுமை மா, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், வெங்காயம், மின்சாரம், வங்கிக் கடன்கள் ஆகியவற்றிற்கு இன்றைய தினத்திலுள்ளவாறு விதிக்கப் பட்ட சகல வரிகளையும் வெவ்வேறாகவும்,

(ii) இப்புள்ளி விபரங்களின் -

(1) 1994 - ஓகஸ்ட் 15

(2) 2001 - டிசம்பர் 15

(3) 2004 - ஏப்ரல் 2

(4) 2005 - டிசம்பர் 1

(5) மற்றும் இன்றைய தினம்

ஆகிய திகதிகளுடனான ஒப்பீடு ஒன்றையும், அவர் கூறுவாரா?

(இ) இன்றைய தினத்திலுள்ளவாறான விகிதங்களைப் பயன்படுத்தி, வளப் பெறுமதி யில் வரியின் தாக்கத்தையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0147/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் (2008 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம், நகர மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் நகரங்களை நிலையானவைகளாக்குவதற்கு 1,489 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தக் கருத்திட்டத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0148/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக 1,712 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தந்தப் பிரதேசங்களின் கருத்திட்டங்களுக்காக செலவு செய்யப் பட்டது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0149 / '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் (2008 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக 3,169 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தந்தப் பிரதேசங்களின் கருத்திட்டங்களுக்காக செலவு செய்யப் பட்டது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0195 / ’08

7.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரன,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுர மாவட்டத்தில் விலச்சிய விவசாய குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் விலச்சிய குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாயக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடி என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) விலச்சிய குடியேற்றத் திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0196 / ’08

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரன,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் விவசாய குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் கந்தளாய் குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாயக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடி என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0517/ '08

9.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாயத் திணைக்களத்துக்குரிய ஆய்வுகூடங்களின் எண்ணிக்கையையும் அவை அமைந்துள்ள இடங்களையும்,

(ii) அந்த ஆய்வு கூடங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) விவசாய திணைக்களத்தின் விதை உற்பத்தி பிரிவு அமைந்துள்ள இடங்களையும் அங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகளின் வகைகளை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006/2007 ஆம் ஆண்டுகளில் மேற்கூறப்பட்ட உற்பத்தி பிரிவினால் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விதைகள் மற்றும் இடங்கள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(ii) அந்த வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகள் மற்றும் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) தனியார் பிரிவில் விதை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட விதை வகைகள் எவை என்பதையும்,

(iv) அந்தக் கம்பனிகளினால் 2006/2007 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு சந்தையில் வழங்கப்பட்ட விதைகளின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0525/ '08

10.

கௌரவ அநுர திஸ்ஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரீமா நிறுவனத்திற்கு கோதுமை மாவின் பொருட்டு அரசாங்கத்தினால் மானியம் வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், ஒரு கிலோ மாவிற்கான மானியத்தொகை எவ்வளவு,

(iii) மேற்படி மானியத்தை வழங்குவதற்கு எப்போதிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது,

(iv) இது எப்போது நிறுத்தப்பட்டது,

(v) மேற்படி காலத்தினுள் ஒவ்வொரு ஆண்டின் பொருட்டும் மானியமாக வழங்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிற்குமான மானியத் தொகைகள் பிரீமா கம்பனிக்கு வழங்கப்பட்ட திகதிகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0527/ '08

11.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மிஹின் ஏயார்" விமானக் கம்பனிக்குச் சொந்தமான விமானங்கள், கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களா அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்டவையா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவை கொள்வனவு செய்யப்பட்டவை என்றால் பின்பற்றப்பட்ட கொள்வனவு நடைமுறை யாதென்பதையும்

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்கள் இருப்பின் எப்போது பெறப்பட்டதென்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின் அது எப்போதென்பதையும்,

(iii) அவ்வாறு பெறப்பட்ட விமானங்களுக்கான பணம் செலுத்தப்பட்ட அடிப்படை, செலுத்தப்பட்ட தொகை மற்றும் அதற்கான நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்களுக்காக இற்றைவரை செலுத்தப்பட்ட தொகை மாதரீதியாக தனித்தனியாக எவ்வளவென் பதையும்,

(ii) நிலுவைத் தொகை இருப்பின், அது எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0529/ '08

12.

கௌரவ அநுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நடைமுறை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தற்போது உயர்தர பரீட்சைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பொதுச் சாதாரணத் தேர்வின் நோக்கம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பல்கலைக்கழக அனுமதிக்கு இப்பொதுத் தேர்வில் சித்தியடைவது கட்டாயமாகுமா,

(ii) அவ்வாறாயின், அது எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பொதுத்தேர்வில் சித்தயடையாத ஆயினும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் Z-Score பெறுமானம் வெளியிடப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0722 / '08

13.

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நுவரெலியா மாவட்டத்திலும் அதன் எல்லைப் புறங்களிலும் மின்வலுவை உற்பத்தி செய்கின்ற அரச மற்றும் தனியார் துறை மின்வலு உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அத்தகைய ஒவ்வொரு மின்வலு உற்பத்தி நிலையத்தின் மூலமும் வருடாந்தம் எவ்வளவு மின் அலகுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன,

(iii) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையமும் நிர்மாணிக்கப்பட்ட போது நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புகளின் பொருட்டு ஒதுக்கப் பட்ட நிலப்பரப்பு மற்றும் அகற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள மின்சாரமற்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் மின்சாரம் கிடைக்கப்பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(ii) குறிப்பிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வோல்ற் மின்சாரத்து டன் கூடிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் குறித்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி மின்சாரமற்ற மற்றும் குறைந்த வோல்ற் மின்சாரத்தைக் கொண்ட பிரதேசங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) குறித்த அமைச்சினால் அமுலாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ள சீன உதவிகள் உட்பட 'சீடா' கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய மின்சாரக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவற்றில் நுவரெலியா மாவட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள கருத்திட் டங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0723/ '08

14.

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் இருக்கின்ற அதேநேரம் ஆசிரியர் தொழிலும் ஈடுபட்டுள்ளோர்களது எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களுக்குச் சம்பளம் செலுத்தும் பொருட்டு சமுர்த்தி இயக்கத்தினால் மாதாந்தம் செலுத்தப்படுகின்ற தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட சமுர்த்தி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றபோது ஏற்புடையதாகக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் யாவை,

(ii) ஆட்சேர்ப்பின் போது ஒவ்வொரு சமுர்த்தி ஆசிரியரினதும் கல்வித் தகைமை யாது,

(iii) இவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்ட பதவியில் சேவையில் ஈடுபடுத்தப் படுவார்களா,

(iv) இன்றேல் கல்வி அமைச்சுக்கு இணைக்கப்படுவார்களா,

(v) இவர்களுடைய ஆசிரியர் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0724 / '08

15.

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி உதவி தொகைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களில் 1000 ரூபா, 500 ரூபா, 300 ரூபா மற்றும் 140 ரூபா கொடுப்பனவு களைப் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்வளவு,

(iii) இதற்கிணங்க, சமுர்த்தி நலன் பெறுநர்களுக்கு செலுத்தப்படும் மொத்தத் தொகை பிரதேச செயலாளர் மட்டத்தில் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி, மாவட்டத்தில் சமுர்த்தி இயக்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிகளை வகிக்கின்றவர்கள் தனித்தனியாக எவ்வளவு,

(ii) இவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப் பனவுகள் அத்துடன் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அவற்றின் கூட்டுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி, ஒவ்வொரு சமுர்த்தி வங்கியினதும் கணக்குகளிலுள்ள சேமிப்புத் தொகை மற்றும் நலன்பெறுநர்களின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு,

(iii) குறித்த கடன்பட்டோர் மற்றும் செலுத்தப்படாதுள்ள கடன் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்),— 1996ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கத்தின் விளைவாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் (திருத்தம்),— 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்),— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

5.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2008 செத்தெம்பர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப் படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 142 | — | கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — | சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*3.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் 07 ஆந் திகதிய 1544/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*5.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூராயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*8.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

*9.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு

*10.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*23.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*24.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*26.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

34.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.